2023 அக்டோபர் 9]
அணையை thermocol *போட்டு மூடி வைத்திருக்கிறோம். ஒன்றும் கவலைப்படாதீர்கள். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.M. *தமிழ்செல்வம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

203—

கலைக் கல்லூரி

***62240—திரு. T.M. தமிழ்செல்வம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை பகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஊத்தங்கரை பகுதி அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 11 சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், மூன்று சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், நான்கு அரசு polytechnic *கல்லூரிகளும் மற்றும் எட்டு சுயநிதி* polytechnic *கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், ஊத்தங்கரை பகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.M. *தமிழ்செல்வம் அவர்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வணக்கம். எங்கள் கழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். எங்கள் மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், கழகத்தின் துணைப்*

பொதுச் செயலாளர், மூன்றெழுத்துக்குச் சொந்தக்காரர், எங்கள் பாசமிகு அண்ணன் கே.பி.எம். அவர்களையும் வணங்குகிறேன்.

ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் மற்றொரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அந்த மாவட்டத்தில் பல்வேறு அரசு கலைக் கல்லூரிகள், தனியார் கலைக் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த மாவட்டத்தில் இப்போது இருக்கிற அரசு கல்லூரிகள் மொத்தம் 5—மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று பர்கூரில் இருக்கிறது. அதற்கு ஒதுக்கப்பட்ட இடம் 754. அதில் சேர்ந்திருக்கிற மாணவிகளுடைய எண்ணிக்கை 570தான். இன்னும் 184 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதைப்போல ஓசூரில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மொத்தம் 543 மாணவர்களுக்கான இடங்கள் இருக்கின்றன. அதில் சேர்க்கப்பட்டிருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 494. மீதம் இருக்கிற இடங்கள் 49. அதேமாதிரி தளியில் இருக்கிற கல்லூரியில் 240 மாணவர்களுக்கான இடங்கள் இருக்கின்றன. ஆனால் சேர்ந்திருப்பது 141 பேர்தான். 99 இடங்கள் காலியாக இருக்கின்றன. கிருஷ்ணகிரியில் உள்ள கல்லூரியில் 1,078 பேர் சேருவதற்கு இடங்கள் இருக்கின்றன. ஆனால், சேர்ந்திருக்கிற மாணவர்கள் 1,028. அங்கேயும் 50 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேமாதிரி, கிருஷ்ணகிரியில் உள்ள மகளிர் கல்லூரியில் 987 பேருக்கு இடங்கள் இருக்கின்றன. ஆனால் சேர்ந்திருக்கிற மாணவர்கள் 872 பேர்தான். 115 இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 அக்டோபர் 9]

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்தத் தொகுதிகளில் கல்லூரிகள் இல்லையோ, அங்கெல்லாம் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். அந்த அடிப்படையில்தான், இந்த மாவட்டத்தில் கல்லூரிகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், மாணவர்களும் அதிகம் பயன்பெறுகின்ற காரணத்தினால் நிதிநிலைமையைப் பொறுத்து அதைத் துவக்குவதற்கான வாய்ப்புகள் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம் அவர்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதுவும் இல்லை. மாத்தூரிலிருந்து கிருஷ்ணகிரியில் உள்ள ஆண்கள் கலை கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 35 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். பெண்கள் கலை கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 40 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். பர்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 32 கி.மீ. தூரத்தில் உள்ளது. என் தொகுதி ஏழ்மையான தொகுதி என்பதால், எங்களுக்கு ஒரு கலைக் கல்லூரி அல்லது நர்சிங் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை— குறிப்பாக, பொறியியல் கல்லூரிகளிலும், அரசு பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்று சொன்னதன் மூலமாக எல்லோரும் சேர்ந்திருக்கிறார்கள். அதைவிட புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக, கிராமப்புறத்தில் இருக்கிற மாணவ, மாணவிகளுக்கு, அதுவும் குறிப்பாக, பெண்களுக்கு மாதம் ரூ.1,000/–, தனியார் கல்லூரியாக இருந்தாலும், அரசு கலைக் கல்லூரியாக இருந்தாலும் எங்கே மாணவிகள் சேர்ந்தாலும், அவர்களுக்கு மாதம் ரூ.1,000/– என்று வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். இந்த புதுமைப்*

[2023 அக்டோபர் 9

பெண் திட்டத்தினால், பெண்களின் படிப்பும் இப்போது அதிகரித்திருக்கிறது. இதன் மூலமாக அரசு கலைக் கல்லூரிகளில் முன்பு இருந்ததைவிட இப்போது எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய மாவட்டத்திலேயே அரசு கலைக் கல்லூரிகளில் மாணவர்களுக்கான இடங்களின் மொத்த எண்ணிக்கை 3,602; சேர்ந்திருக்கிற மாணவர்கள் 3,105; காலியிடங்கள் 497–தான் (only 15%). ஆனால், தனியார் கல்லூரிகளில் பார்த்தீர்களென்றால், அங்கே மொத்த மாணவர்கள் 3,069; சேர்ந்திருக்கிற மாணவர்கள் 1,787–தான்; 40% காலியாக இருக்கிறது. ஆக, இதற்கெல்லாம் காரணம், அரசு கலைக் கல்லூரிகளிலும், அரசு கல்லூரிகளிலும் மற்றும் எல்லா பொறியியல் கல்லூரிகளிலும் இன்று மாணவர் சேர்க்கை அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நான் முதல்வன் திட்டமும், புதுமைப் பெண் திட்டமும்தான் முக்கியக் காரணம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, உங்களுடைய தேவை என்ன என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். ஒரே ஆண்டில் 31 கல்லூரிகளைத் துவக்க வேண்டுமென்று ஆணையிட்ட ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறையின் மூலமாக 20, அறநிலையத் துறையின் மூலமாக 10, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒன்று, மொத்தம் 31 கல்லூரிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகள் இல்லாத தொகுதிகளில் துவக்கப்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நிதிநிலைமைக்கேற்ப அதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தில் சுமார் 60,000 மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். அப்பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், 150 கி.மீ. செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்நிலையைப்

2023 அக்டோபர் 9]

போக்க கொல்லிமலையின் மேலே அரசு கலைக் கல்லூரி அமைக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலைவாழ் பகுதிகளில் கல்லூரிகளை அமைக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கும் ஒரு முக்கிய எண்ணம் இருக்கிறது. நான் சென்ற மாதம் கொடைக்கானல் சென்றிருந்தபோது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள்கூட அங்கே ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கா. ராமசந்திரன் அவர்கள்கூட ஊட்டி மலையிலே மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதியில் ஒரு கல்லூரி வேண்டும் எனக் கேட்டார். ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, நிதிநிலைக்கேற்ப அந்தப் பகுதிகளிலெல்லாம் கல்லூரிகளை அமைப்பதற்கு விரைவில் அதற்கான முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் உள்ள அரக்கோணம் அரசு கலைக் கல்லூரியிலே சுமார் 1,500 ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அந்தக் கல்லூரியிலே அனுமதிக்கப்பட்ட 83 பேராசிரியர் பணியிடங்களில் 32 பேராசிரியர்கள்தான் இருக்கிறார்கள். இரண்டு வருடங்களாக 51 பேராசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதனால், மாணவர்கள் பெயரளவில் கல்லூரிக்கு வருகிறார்கள், போகிறார்கள்; அங்கு பயிலும் மாணவர்களுக்குக் கல்வி என்பது மிகவும் கேள்விக்குறியாக இருக்கிறது. அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கல்லூரியிலே காலியாகவுள்ள 51 பேராசிரியர் பணியிடங்களுக்குப் புதிய பேராசிரியர்களை நியமிக்கும் வரை, கௌரவப் பேராசிரியர்களையாவது உடனடியாக நியமனம் செய்து,*

அங்குள்ள மாணவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்குமாறு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இதுபோன்ற கௌரவப் பேராசிரியர்கள் முழுவதுமாக நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபோதே 4 ஆயிரம் பேராசிரியர்களை TRB மூலமாக நியமிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்கான பணிகளும் வெகுவிரைவாக நடைபெற்று வருகின்றன. அது சம்பந்தமாக சிலர் நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார்கள். அதனால், சற்று தடை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல காலியிடம் அங்கு இருக்குமானால், எழுதிக் கொடுங்கள்; அங்கு கௌரவப் பேராசிரியர்களை நியமிப்பதற்கு நிச்சயமாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அஞ்சுகிராமம் பேரூராட்சியிலே, பால்குளம் என்ற பகுதியிலே அரசு கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. சுமார் 1,500 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். 90 சதவிகிதம் மாணவ, மாணவிகள் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ராதாபுரம் தொகுதியைச் சார்ந்தவர்கள். அந்த மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான வகுப்பறைகள் இல்லை. பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தயவுகூர்ந்து கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற காமராஜர் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக வகுப்பறைகள்,* laboratories *இல்லாத இடங்களில் அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதிலுமிருந்து அத்தகைய கோரிக்கைகள் வருகிற கல்லூரிகளில் எல்லாம் படிப்படியாகத் தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உங்கள் கோரிக்கையையும், மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கோரிக்கையையும் ஏற்று உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக இருந்ததை, இந்த ஆண்டுதான் நீங்கள் அரசுக் கல்லூரியாக மாற்றினீர்கள். அதனால், நிச்சயமாக அங்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இதுகுறித்து என்னிடமும் மனு கொடுத்திருக்கிறார்கள். நல்ல செய்தி வரும்.*

வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. *ரகுராமன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

உயர்மட்டப் பாலம்

*58261—திரு. A.R.R. ரகுராமன்:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்திரப்பட்டி–நத்தப்பட்டி சாலையில் உள்ள தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?